இறை-மனித

# உறவின் பாலம்

அன்பின் கடிதம் – 20

## இரக்கத்தின் யூபிலி ஆண்டு




"ஆண்டவருடைய ஆவி என்மேல் உளது. ஏனெனில், அவர் எனக்கு அருள்பொழிவு செய்துள்ளார். ஏழைகளுக்கு நற்செய்தியை அறிவிக்கவும், சிறைப்பட்டோர் விடுதலை அடைவர், பார்வையற்றோர் பார்வை பெறுவர் என முழக்கமிடவும் ஒடுக்கபட்டோரை விடுதலை செய்து அனுப்பவும் ஆண்டவர் அருள் தரும் ஆண்டினை முழக்கமிட்டு அறிவிக்கவும் அவர் என்னை அனுப்பியுள்ளார்" (லூக் 4:18–19) என்று நாசரேத்துத் தொழுகைக் கூடத்தில் இயேசு கிறிஸ்து முழக்கமிட்டது இறைவனின் நிலையான உடனிருப்பையும், மனிதனில் படைப்பின் தொடக்கத்தில் பதியப்பட்ட இறைசாயல் கிறிஸ்துவில் புதுப்பிக்கப்படுவதையும் எடுத்துரைக்கின்றது.

நமது திருத்தந்தை பிரான்சிஸ் டிசம்பர் 8, 2015 புனிதமிக்க கன்னி மரியாவின் அமல உற்பவப் பெருவிழா முதல், நவம்பர் 20, 2016 கிறிஸ்து அரசர் பெருவிழா வரை இரக்கத்தின் மாபெரும் யூபிலி ஆண்டு கொண்டாடப்பட வேண்டும் என்று அகில உலகக் கத்தோலிக்கத் திருச்சபைக்கு அழைப்பு விடுத்திருக்கின்றார். "உங்கள் தந்தை இரக்க முள்ளவராய் இருப்பது போல நீங்களும் இரக்கம் உள்ளவர்களாய் இருங்கள்" (லூக் 6:36) என்ற இறைவார்த்தையின் ஆழ்ந்த பொருளால் உந்தப்பட்டு, பாவிகளின் மட்டில் நாம் இரக்கமுடையோராய் இருக்க வேண்டும் என்ற நோக்கில் இரக்கத்தின் ஆண்டினை அறிவிப்பதாக திருத்தந்தை கூறியுள்ளார். இரக்கத்தின் ஆண்டினை பொருளுள்ள வகையில் நாம் கொண்டாடி, கிறிஸ்துவில் ஒப்புரவாக்கப்பட்டு புதுப்பிக்கப்படவும், மனித மாண்பினை நிலைநாட்டவும், இறை நம்பிக்கையில் எழுப்புதல் அடையவும் ஒருசில சிந்தனைகளை விவிலிய பார்வையில் காண்போம்.

இரக்கத்தின் யூபிலி ஆண்டினை துவங்கும் வேளையில், இயேசுவின் வழியாக இறைவார்த்தை வழியில் நாம் செல்ல வேண்டிய இலக்குகளை வகுத்துக்கொள்வது சாலச் சிறந்தது.

### ஆதரவற்றவர்களோடு.... பரிவிரக்கம்



நயீன் நகர கைம்பெண் மகன் இறந்த வேளையிலும், இலாசர் மரித்த வேளையிலும் தாயும் சகோதரிகளும் ஆதரவு அற்றவர்களாய் உள்ளவர்களுக்கு இயேசு தமது உடன் இருப்பையும் தளர்ந்த இதயங்களுக்கு புத்துணர்வையும் புது வாழ்வையும் வழங்குகிறார். காப்பாற்றப்படுவதற்கு, உதவி செய்வதற்கு யாருமே இல்லை என்னும் நிலையில் இருப்போருக்கும் தமது உடனிருப்பை வழங்குகிறவராக இயேசு தமது பரிவிரக்கத்தை வெளிப்படுத்துகிறார். கைம்பெண் தாயிடம் "அவரை கண்ட ஆண்டவர், அவர்மீது பரிவு கொண்டு, "அழாதீர்" என்றார்" (லூக் 7:13).

நாமும் பல வேளைகளில் பலரிடம் "அழாதீர்" என கூறுகிறோம் அழுகையை நிறுத்த ஆனந்தமாக்க முயற்சிகளை மேற்கொள்கிறோமா?

## இல்லாதவர்களோடு பகிரும் இரக்கம்

மாற்கு நற்செய்தியிலே 6ம் அதிகாரத்தில் தனது வார்த்தையைக் கேட்க வந்த மக்கள் கூட்டம் ஆயரில்லா ஆடுகளைப் போல் இருந்ததால் அவர்கள் மீது பரிவுக் கொண்டு அவர்களுக்கு பலவற்றை கற்பித்த இயேசு நெடுநேரம் ஆக்கின்றதே அவர்களுக்கு தேவையான உணவை அளிக்குமாறு சீடர்களுக்கு பணிக்கின்றார். மக்கள் கூட்டத்தையும் பெரும்தொகையை கணக்கிட்ட சீடர்கள் தங்களது இயலாமையை மையப்படுத்தி வெறுங்கையராய் மக்களை அனுப்பிவிட இயேசுவிடம் கேட்கும்போது இயலாமைக்கு மத்தியிலும் இருப்பதை பகிர இயேசு கற்பித்தார் (மாற் 6:30–44). இயலாமைகளில் நமது கருத்தை நிறுத்தும்போது இறைவனின் வல்லமையை தடுக்கப்பார்கின்றோம். இயேசு காட்டும் பகிரும் இரக்கத்தை வாழ்வாக்க முயலும்பொழுது, ‘‘கடவுளால் எல்லாம் இயலும்’’ (மத் 19:26) என்பதை உணரலாம்.



## செல்வரோடு உடனிருந்து மனமாற்றத்திற்கான இரக்கம்



அன்னையின் புரட்சிப் பாதையிலே செல்வரை வெறுங்கையராய் அனுப்பினார் என்ற வரிகளை நாம் வாசித்தாலும் செல்வர் அனைவரும் வெறுத்து ஒதுக்கப்பட வேண்டியவர்கள் அல்ல அவர்களையும் மனமாற்றத்திற்கு உள்ளான பகிரும் மனப்பான்மையை உருவாக்கும் நிகழ்வுகளை இயேசுவின் பணிவாழ்வில் பார்கின்றோம். லூக்கா நற்செய்தி 7ஆம் அதிகாரத்தில் பரிசேயர் ஒருவரின் இல்லத்திற்கு இயேசு உண்பதற்கு செல்வதையும் அங்கு பாவியான பெண்ணின் மன வருத்தம் நிறைந்த அன்புச் செயலைப் பாராட்டி மிகுதியாக மன்னிப்பு பெறுபவர் தமது செயல்பாடுகளில் இன்னும் மிகுதியான அன்பை வெளிப்படுத்த வேண்டியவர் என்பதை தெளிவுப்படுத்துகிறார்.

மேலும் 19ஆம் அதிகாரத்திலே சக்கேயுவின் வீட்டிற்கு உணவருந்த செல்கையில் பாவியின் வீட்டிற்கு உணவு அருந்த செல்கிறார் என்று மற்றவர்களின் விமர்சனத்திற்கு சிறிதும் தயங்காமல், ‘‘இழந்துபோனதை தேடி மீட்கவே மானிட மகன் வந்திருக்கிறார்’’ (19:10). என்ற தமது கொள்கை இலட்சியத்தை தெளிவுப்படுத்துவதோடு சக்கேயுவின் மனதிலே மனமாற்றத்தின் அறிக்கையையும் தமது செல்வத்தில் பாதியை ஏழைகளுக்கு கொடுப்பதாகவும், எவர்மீதாவது பொய் குற்றம் சாட்டி எதையாவது கவர்ந்திருந்தால் அதை நான்கு மடங்காக திருப்பிக் கொடுத்து விடுகிறேன் என்று சொல்லும் அளவிற்கு மனமாற்றத்திற்கான இரக்கத்தை இயேசு வெளிப்படுத்துகிறார்.





லூக்கா நற்செய்தியிலே 3ம் அதிகாரத்திலே திருமுழுக்கு யோவான் பல்வேறு வாழ்வுச் சூழ்நிலையில் இருப்பவர்களுக்கு அறிவுரை வழங்கும் வேலையில் பொதுமக்கள் கூட்டத்திற்கு, ‘‘இரண்டு அங்கிகளை உடையவர் இல்லாதவரோடு பகிர்ந்து கொள்ளட்டும்; உணவை உடையவரும் அவ்வாறே செய்யட்டும், என்றும் வரிதண்டுவோருக்கு அவர்களுக்கு குறிக்கப்பட்ட தொகைக்கு அதிகமாக எதையும் தண்ட வேண்டாம் என்றும் படை வீரருக்கு எவரையும் அச்சுறுத்தி பணம் பறிக்காதீர்கள்; யாரும் பொய் குற்றம்

சுமத்தாதீர்கள்; உங்கள் ஊதியமே போதும் என்று இருங்கள்.’’ இவ்வாறு அவரவர் வாழ்க்கை சூழ்நிலையில் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்கு முறைகளைக் கூறி நீதியில் கனிந்த இரக்கத்தையே இறைவன் நம் ஒவ்வொருவரிடமிருந்தும் எதிர்பார்கின்றார் என்பதை புரிந்துக் கொள்வோம்.

## இறைஇரக்க ஆண்டில் அனைவரோடும் ஒப்புரவு

ஒப்புரவாக்கும் பணியை கடவுள் கிறிஸ்துவின் வழியாக திருச்சபைக்கும் வழங்கியுள்ளார் (யோவா 20:23). இதையே புனித பவுலடியார் ‘‘அவரே கிறிஸ்துவின் வாயிலாக நம்மைத் தம்மோடு ஒப்புரவாக்கினார். ஒப்புரவாக்கும் திருப்பணியையும் நமக்கும் தந்துள்ளார்’’ (2 கொரி 5:18) என உறுதியுடன் கூறுகிறார். எனவே, விவிலிய அடிப்படையில் நாம் இந்த யூபிலி ஆண்டில் செய்ய வேண்டிய தலையாயப் பணி ஒப்புரவாகும். சமுதாயத்திலும், குடும்பங்களிலும், நிறுவனங்களிலும், பங்குகளிலும், மறைமாவட்டங்களிலும், தனிமனித வாழ்விலும் உள்ள பிளவுகள், பிரிவினைகள் அனைத்தும் அகன்று, ஒப்புரவாக இவ்வாண்டில் நாம் உறுதியுடன் செயல்பட வேண்டும். அதிலும் குறிப்பாக அனைத்திற்கும் மேலாக, ஒப்புரவு அருட்சானத்தின் வழியாக கிறிஸ்து நமக்கு விட்டுச்சென்ற திருப்பணியைத் தொடர்ந்து செயல்படுத்த வேண்டும். கடவுளோடும், நம் சகோதர சகோதரிகளோடும், நமக்கு அடுத்திருப்போரிடமும் ஒப்புரவாக வேண்டும்.



## இரக்கம் என்றால் என்ன?

மத்திய காலத்து இறையியலார் புனித தாமஸ் அக்குவினாஸ், இரக்கம் என்றால் என்ன? என்ற தனது இறையியல் சுருக்கத்தில் (Summa Theologicae) கூறுகையில்,

*‘‘நம்மிலும் நம்மைச் சுற்றிலும் காணப்படும் பாவத்தை கண்மூடித்தனமாய் சகித்துக்கொள்வதும், தன் பாவத்தை நியாயப்படுத்துவதும், பாவம் செய்வதையே தனது மனித உரிமையாகக் கொண்டாடுவதும் இரக்கம் அல்ல’’ என்றும், ‘‘பாவத்தை வெறுத்து, அதை வெளிப்படையாகப் புறக்கணித்து, பாவியை அன்பு செய்து பரிவிரக்கம் கொள்வதே உண்மையான இரக்கம்’’ என்றும் கூறுகிறார். மேலும் ‘‘இரக்கம் என்பது பாவக்குழியில் விழுந்து கிடக்காமல், பாவியை உண்மையை நோக்கி வழிநடத்துவதும், மனம் மாறிய பாவி தன் முழு ஆற்றலோடும், அன்போடும் கடவுளை அன்பு செய்து கடவுளுக்கு முன் பொறுப்புள்ள நேர்மையான வாழ்வு நடத்தத் தூண்டுவதுமே உண்மையான இரக்கம்’’*

## இரக்கச் செயல்களுக்கு முன் உதாரணம் அன்னை மரியாள்

இறைவன் இயேசுவின் வாழ்கையிலே பல்வேறு இரக்கச் செயல்களைக் குறித்து தியானித்த நாம் அன்னை மரியாளின் வாழ்க்கையிலும் இரக்கத்தின் செயல்களுக்கு பல உதாரணங்களை காணயியலும். மீட்படைந்தோரின் பட்டியலில் மரியா முதலிடத்தை வகிக்கின்றார். இயேசு கிறிஸ்துவின் இறப்பு, உயிர்ப்பு ஆகிய பாஸ்கா மறைநிகழ்ச்சியால் கிடைத்த மீட்பு கடவுளின் சிறப்புக் கொடையாக மரியாவுக்கு முன்னரே கொடுக்கப்பட்டது என இறையியலார் வழங்குகின்றனர். எனவேதான் இறைவனின் அன்னையான புனிதமிக்க கன்னி மரியாவை ‘அமல உற்பவி’



என்றழைக்கின்றோம். இம்மறைபொருளை ஆழ்மனதில் உணர்ந்தவராய் மரியா பின்வருமாறு கடவுளை புகழ்ந்து பாடினார்: ‘‘ஆண்டவரை எனது உள்ளம் போற்றிப் பெருமைப்படுத்துகின்றது.... அவருக்கு அஞ்சி நடப்போருக்குத் தலைமுறை தலைமுறையாய் அவர் இரக்கம் காட்டி வருகின்றார்... மூதாதையருக்கு உரைத்தப்படியே அவர் ஆபிரகாமையும், அவர்தம் வழிமரபினரையும் என்றென்றும் இரக்கத்தோடு நினைவில் கொண்டுள்ளார்’’ (லூக் 1:47–57). அவர் இறைமகனை தன் மகனாக கருவில் சுமந்தபொழுதும் தேவையில் இருப்பவர்களுக்கு தாமே முன் சென்று உதவும் இரக்கத்தை பலவேளைகளில் வெளிப்படுத்துள்ளார் என்பதை நற்செய்தி நூல்களில் நாம் வாசிக்கின்றோம்.

எலிசபத்தை அன்னையின் பேறுகாலத்தில் அன்னை மரியாள் உடனிருந்து பணிவிடை புரிந்ததை லூக்கா நற்செய்தியாளர் எடுத்துரைக்கின்றார். அதனால் தான் எலிசபத் அன்னையும் என் ஆண்டவரின் தாய் என்னிடம் வர நான் யார்? (லுக் 1:43) என எடுத்துரைக்கிறார்.

கானாவூர் திருமண வேளையில் திருமணப் பந்தியில் திராட்சை இரசம் தீர்ந்தவேளையில் தாமாக முன் வந்து ஆண்டவர் இயேசுவிடம் அவர்களுக்காக பரிந்து பேசும் அன்னையின் இரக்கச் செயலை நாம் மறக்க இயலாது. விண்ணகம் சென்ற பிறகும் கூட பல்வேறு காட்சிகள் வழியாக இம்மண்ணுலகின் மீது இரக்கம் கொண்டவராய் செப தவத்தை வழியுறுத்தி வருகின்றார்(பாத்திமாவில் மூன்று சிறுவர்களுக்கும், லூர்து நகரில் பெர்னதெத்க்கும், இன்றும் பல்வேறு நோய் உற்றோர்கும் ஆதரவற்றவர்களுக்கும் அன்னையின் பரிந்துரை வழியாக இறைஇரக்கம் பெறும் வாய்க்காலாக திகழ்கிறார்).

**இறுதியாக**

இரக்கத்தின் மாபெரும்  ஜூபிலி ஆண்டில் நடைபெறும் செயல்பாடுகள், ஆன்மீகம் மற்றும் உலகம் சார்ந்த இரக்கச் செயல்களை வழியுறுத்தி, மத்தேயு நற்செய்தி 25:31–45வரை உள்ள இறைவார்த்தையில் காணப்படுகின்ற இரக்கச் செயல்களை முடிந்தவரைப் பின்பற்றி விண்ணரசின் மதிப்பீடுகளை இம்மண்ணில் விதைத்திட முயலுவோம். பசியோடு வாடுபவர்களுக்கு உணவளிக்கவும் தாகத்தில் உள்ளவர்களின் தாகம் தீர்க்கவும் ஆடையின்றி உள்ளவர்களை உடுக்கவும், தங்கி வாழ வீடு அற்றவர்களை குடி அமர்த்தவும், நோயாளிகளையும் சிறையில் உள்ளவர்களையும் சந்திக்கவும் தூண்டி செயல்பட உதவுவோம்.

---

**தொடர்புக்கு:**

**சென்னை-மயிலை உயர்மறைமாவட்ட விவிலியப் பணிக்குழு**
அருட்பணி மையம். 25, ரோசரி சர்ச் சாலை, சாந்தோம், சென்னை – 600004
☎ 044-24935129 Website: www.bible-commission.com
E-mail: madrasmylaporebiblecom@gmail.com